வருகிறது. அந்த நிலையிலே இந்த இரண்டையும் ஒரே இயக்குநர் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. இப்போதுள்ள இரண்டு இணை இயக்குநர்களில் ஒருவர் துவக்கக் கல்விப் பிரிவினைப் பார்க்க வேண்டும் என்றும் ஒருவர் உயர்நிலை கல்வி பிரிவினைப் பார்க்க வேண்டும் என்றும் இணைப்பு ஏற்படத்தக்க விதத்தில் இயக்குநர் பார்க்க வேண்டும் என்ற முறையினை இப்போது ஏற்படுத்தியிருக்கிறோம்.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்போது கூட பயிற்சி யளிக்கும் உயர் நிலைப் பள்ளிகளிலே, பயிற்சிப் பள்ளிகளிலே, ஒன்றும் வகுப்பு முதல் பதினோரும் வகுப்பு வரையில் இருக்கின்றன. அங்கே ஒன்றும் வகுப்பில் பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியரும் செகண்டரி கிரேடு ஆசிரியர் தான். அப்படியிருக்கும்போது செகண்டரி கிரேடு எஜுகேஷன் கீழே வரும் பள்ளிகளை செகண்டரி எஜுகேஷன் டைரெக்டர் கவனிப்பதற்கும் தொடக்கப் பள்ளியினை தொடக்கப்பள்ளி டைரெக்டர் கவனிப்பதற்கும் ஏற்றவாறு ஏற்பாடு செய்வதில் சிரமம் இருக்க முடியாது. இதை அரசு அறியுமா, அறிந்து அதுபற்றி ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்காக அதாவது தொடக்கப் பள்ளிகளுக்கு என ஒரு தனி இயக்குநரைப் போடுவதனால், என்னென்ன அனுகூலங்கள் ஏற்படும் ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், என்று அவர்கள் நினைக்கின்றார்களோ அவற்றை ஒருவரே இருந்து பார்ப்பதாலும் பெறக்கூடும் என்று அரசு கருதுகின்றது.

Unauthorised use of the Cauvery Water for Irrigation

*185 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU M. K. D. NATARAJAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that some people pump the Cauvery waters for irrigation unauthorisedly; and

(*b*) if so, the action taken by the Government to prevent it?

பாசனத்திற்கு காவிரி நீரை அனுமதியின்றி உபயோகப்படுத்தல் —

(திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்) (திரு மு. க. து. நடராசன் சார்பில்): மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு அனுமதியின்றி, காவிரி நீரை விசை ஏற்றம் மூலம் இறைத்து சிலர் பாசனம் செய்வதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) உரிய அனுமதி பெறுமல் விசையேற்றங்களின் மூலம் செய்யப் பெறும் பாசனம், வழக்கமாக வசூலிக்கப்படும் தண்ணீர் தீர்வையை விட இருபது மடங்கு அதிக தீர்வை வசூலிக்கப் படுகின்றது. அத்தகைய நேர்வுகள் அனைத்தையும் கண்டு பிடித்து அறிவிப்புகள் அனுப்புமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. காவிரியாற்றிலிருந்தும் அதன் வாய்க்கால்களிலிருந்தும் இறவைப் பாசனம் பெறுவதை, இறவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது மூலமாகச் சீரமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றது.

திரு ஒய். வேங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, இது மாதிரி பாசனமானது, சேலம் மாவட்டம் பள்ளிபாளையத்திலிருந்து மோகனூர் கரை வரையில் ஏராளமான அளவில், ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பயன் பெறத்தக்க விதத்தில், நடந்து கொண்டு வருகிறது. மேலும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பாசன வசதிகளைச் செய்துகொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதிகளிலே ஜயண்ட் பம்புசெட்டுகளை வைத்துப் பாசனம் செய்து கொள்ள முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதை அரசு அறியுமா? இப்படிக் கட்டுப் பாடு இல்லாமல் நடந்து கொண்டிருப்பதை முறைப்படுத்த அரசு தக்க ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, திரு தீக்ஷிதர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இப்படி நடைபெறுவது அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றது. ஆனால் இவற்றை எப்படி கடுமையான நடவடிக்கைகள் மூலம் தடுத்து நிறுத்த முடியும் என்று ஆலோசிக்கப்பட்டது. நான் கூட மோகனூர் பகுதிகளுக்குச் சென்று அவற்றை நேரடியாகப் பார்வையிட்டேன். இதுபற்றி அப் பகுதிகளில் உள்ள விவசாயிகளோடு கலந்து பேசினேன். இது நீண்ட நெடுங்காலமாக பழக்கத்தில் இருந்துவரும் காரணத்தினால் அவற்றை உடனடியாக அப்புறப்படுத்த முடியுமா என்பது பிரச்சினை. அப்படித் தீவிர நடவடிக்கையாக எதையாவது செய்தால், அது அரசியல் பிரச்சினையாகவும் ஆகிவிடும், உணவு உற்பத்தியினையும் பெருமளவிற்கு அது பாதிக்கக்கூடும். எனவே அதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது. ஆனால் திரு தீக்ஷிதர் அவர்கள் சொன்னதைப் போல ஆயிரக்கணக்கில் இல்லை. 'ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு' என்று சொல்லுவது சரியில்லை. மொத்தம் 2 அல்லது 3 ஆயிரம் ஏக்கர்களுக்கு இருக்கக்கூடும். முழுமையான தகவல்கள் இல்லை. இருந்தாலும் அவற்றை எப்படி ஒழுங்கு படுத்துவது, எப்படி முறைப்படுத்துவது என்று யோசிக்கிறோம். அவற்றை லிஃப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளாக மாற்றிவிடலாம் என்று அரசு தீர்மானித்திருக்கின்றது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில்

1975 மார்ச் 25]

41 லிஃப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளாக அவற்றை மாற்றிவிடலாம். மேற்கொண்டு இப்படி நேராவண்ணம் தடுக்கத்தக்க முறையில் இதைச் செய்து விடுவது நல்லது என்று மாவட்ட ஆட்சித்தலைவர் ஆலோசனை சொல்லியிருக்கின்றார். அரசு அதைப் பரிசீலித்து வருகின்றது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதிகளிலே இது பல்லாண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரணத்தினால் உடனடியாக அப்புறப் படுத்துவது ஒரு பிரச்சினையாக இருக்கின்றது என்றார். ஆனால் இப்போது மோகனூரில் காவிரிக்கரையில் பெரிய கிணறு ஒன்றை வெட்டுவதற்காக இரண்டொருவர் பணம் வசூலித்துக் கொண்டிருப் பதாக இரண்டு தினங்களுக்கு முன்பு திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் இந்தச் சபையில் தெரிவித்தார். அதையும் மனத்தில் வைத்துக் கொண்டு புதிதாக எதுவும் ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இப்படிப் பட்ட தவறுகள் நடைபெறக் கூடாது என்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் கொடுத்து, பெர்மிட்டுகளைக் கொடுத்து அதை ஒழுங்குபடுத்தச் சொன்னோம். ஆனால் முதலில் 3 குதிரை சக்தி உள்ள இயந்திரத்தைப் போட்டு, பிறகு அதைப் பெரிய அளவிற்கு மாற்றியுள்ள நிலைமையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட நேரங்களிலே வழங்கப்பட்ட பெர்மிட்டுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இவற்றைத் தடுத்திட வேண்டும் என்றுதான் லிஃப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளைக் கொண்டுவர வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக் கிறோம். இப்படிப்பட்ட தவறுகளை யார் செய்தாலும், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, காவிரியை ஒட்டிய பகுதிகளான சேலம், திருச்சி மாவட்டங்களிலே அதிகமான அள விற்கு அத்தகைய பாசனத்தைக் கையாள்கின்றார்கள். இதிலே எவ்வளவு பகுதியில் இப்படித் திருட்டுத்தனமாக பாசன முறையைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, 'திருட்டுத் தனமாக' என்ற சொல் பத்திரிகைகளில் ஒரு தவறான, விபரீத மான அர்த்தத்தைக் கற்பித்துவிடக்கூடும். இதனால் நடைபெற்று வரும் காவிரி நீர் பேச்சு வார்த்தைகளுக்கும் குந்தகம் ஏற்பட்டு விடக்கூடும். இப்படிப்பட்ட பாசனம் காவிரிப் படுகையில்தான் நடை பெறுகின்றது என்று எண்ணிவிட வேண்டாம். எல்லா ஆற்றுப் படுகைகளிலும் நடைபெறுகின்றது. இவற்றை முறைப்படுத்த வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டும் என்று ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் நாம் கேட்டிருக்கிறோம். சேலத்தைப் பொறுத்தமட்டில்

இது உடனடியாக அமுலுக்கு வருகின்றது. அங்கே 41 லிஃப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளை ஏற்படுத்தி, அதன்மூலம் இதிலே ஒரு வரைமுறையை ஏற்படுத்த இருக்கின்றது. அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் இப்படிச் செய்த சிபாரிசு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கின்றது. ஒழுங்குமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைதான் இது. இதைத்தவிர வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வந்த பிறகுதான், இதைச்செய்ய அரசு அந்த முடிவிற்கு வந்திருக்கின்றது.

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: தலைவரவர்களே, கோவை மாவட்டம் அமராவதி ஆற்றிலும் பவானி ஆற்றிலும் இப்படிப்பட்ட பம்பு செட்டுகளை வைத்துப் பயிர் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதைப்பற்றிய தகவல்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா? எவ்வளவு பம்பு செட்டுகள் அப்படி இயங்கிக் கொண்டிருக்கின்றன? அங்கே எவ்வளவு லிஃப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளை ஏற்படுத்த அரசு முயற்சிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, காவிரி பற்றிய கேள்வியினை ஒட்டி இது வருவதால் பத்திரிகைகளில் தவருன செய்திகள் வந்துவிடக்கூடாதே என்று அஞ்சுகிறேன். தவறுதலாக, புதிதாக ஆயக்கட்டில் சில பகுதிகளைச் சேர்க்க முயற்சிக்கிருர்கள் என்ற எண்ணம் வந்துவிடக் கூடாது. அமராவதி, பவானி பகுதிகளில் கடந்த இருபது ஆண்டுகளாக இதைச் செய்து கொண்டிருக்கின்ருர்கள் என்பது அரசிற்குத் தெரியும். ஒரு ஆற்றுப் படுகையிலிருந்து 50 அடி தூரத்திற்கு அப்பால்தான் கிணறுகளை வெட்ட வேண்டும். குறைவான தூரத்தில் வெட்டக்கூடாது என்ற உத்தரவிருந்தும் கூட சில இடங்களில் வெட்டப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், கிணற்றுக்கு மின் இணைப்புகளைக் கூடப் பெற்றிருக்கின்ருர்கள். ஆனல் இப்போது அரசின் அனுமதி இல்லாமல் அதைச் செய்யக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறோம். இதைத் தடுப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதே நேரத்தில் உள்ளதை ஒழுங்குமுறைப் படுத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். கோவை மாவட்டத்திலும் இப்படி லிஃப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளை ஏற்படுத்தலாமா என்று ஆலோசித்து வருகிறோம்.

திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர்: தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பவானி ஆறு, காலிங்கராயன் வாய்க்கால், கீழ்ப்பவானி பகுதிகளில் இப்படிப் பயன் படுத்தி வருகின்ருர்கள். அங்குள்ள விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொள்ள முன்வந்தால் அரசு அனுமதி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மேற்கொண்டு ஆயக்கட்டை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவிக்காது. காரணம் காவிரி நீர்பற்றிய பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. அதிலே நமக்கு எவ்வளவு நீர் கிடைக்கப்

போகிறது என்று தெரியாத நிலையில் உள்ள ஆயக்கட்டை விரிவு படுத்துவது, விவசாயத்திற்கும் நல்லதல்ல, அரசாங்கத்திற்கும் நல்லதல்ல, எனவே அதுபற்றி பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, பவானி ஆற்றுக்கும் காளிங்கராயன் கால்வாய்க்கும், இப்போது நடைபெற்றுவரும் காவிரி நீர் பேச்சுக்கும் சம்பந்தமில்லை. அந்தப் பகுதிகளிலே லிஃப்ட் இர்ரிகேஷன் நடைபெறுகிறது. அதே மாதிரி முசிறி பகுதியிலும் காவிரி ஆற்றையொட்டி உள்ள பகுதிகளிலே அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் வைத்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பவானியும் காவிரியின் கிளை ஆறுதான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: பவானி உபநதி. கிளைநதி யில்லை. காவிரியோடு வந்து சேருகின்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அது எப்படியானாலும் ஒன்று உறுதி. கீழ் பகுதியிலுள்ள ஆயக்கட்டுகள் பாதிக்கப்படாத வகையிலே மேல் பகுதியிலுள்ள ஆயக்கட்டு பகுதிகளுக்கு ஏற்கெனவே சில ஆண்டுகளாக அந்த முறையில் தண்ணீர் பயன்படுத்தப்பட்டு வந்தால், அதை ஒழுங்குபடுத்தலாமா என்று அரசு ஆலோசித்து வருகிறது. அவற்றை ஒழுங்குபடுத்த வேண்டுமா அல்லது அப்புறப்படுத்த வேண்டுமா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவிக்கும் ஆலோசனைகளின் பேரிலேதான் அரசு முடிவெடுத்து நடவடிக்கை எடுக்கும்.

Water-Tank at Arcottonkudisai Village

* 186 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to construct a Water-Tank at Arcottonkudisai Village in Moonjurpattu Panchayat, Vellore Taluk, North Arcot District ;

(*b*) if so, when the work will be taken up ; and

(*c*) the estimated expenditure for the work?

ஆற்காட்டான் குடிசை கிராமத்தில் நீர்த்தேக்கம்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தாலுக்கா, மூஞ்சூர்பட்டு பஞ்சாயத்து, ஆற்காட்டான்குடிசை கிராமத்தில் நீர்த்தேக்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?